## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

வா.சா. 4 நாள் : 25.09.2025

அசல் வழக்கு எண். 13/2022

பெயர் ஹாஜா சுஜாவுதீன் த/பெ ஹபீப் ரஹ்மான்

வயது 49 தொழில் வியாபாரம்

கிராமம் அரங்ககுடி தாலூக்கா தரங்கம்பாடி

சாட்சியிடம் உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் முதல் விசாரணை:**

வாதி கொடுத்த நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் அரங்ககுடியில் டிராவல் ஏஜெண்டாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 4ல் முதலாவது சாட்சியாக இருப்பது என்னுடைய கையெழுத்து தான். ஹாஜமைதீன் என்பவர் நசுருல்லாவிடம் பணம் வாங்கியது தொடர்பாக எழுதப்பட்டது. ஹாஜாமைதீன் இறந்துவிட்டார். நசுருல்லாவின் தாய்மாமன் சம்சுதீன் என்பவரிடம் ஹாஜாமைதீன் பணம் கேட்டார். தன்னிடம் பணம் இல்லை என்று அவரின் சகோதரி ஹபீப் நிஷா என்பவரின் மகன் நசுருல்லாவிடம் வாங்கி கொடுத்தார். அவ்வாறு கொடுத்த தொகையை கிளியனூர் ஜமாத்தில் ஒப்படைத்தோம்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அலுவலகத்தில் வைத்து மாலை 4.00 மணிக்கு கையெழுத்து போட்டேன். பள்ளி வாசல் ஆபிசில் வைத்து கையெழுத்து போட்டேன். அந்த ஆவணத்தில் பல நபர்களின் கையெழுத்து உள்ளது என்றாலும் யார் யார் எந்த இடத்தில் வைத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. ஆவணத்தில் நோட்டரி பப்ளிக் கையெழுத்து போட்டது எனக்கு தெரியாது.

அந்த ஆவணத்தில் கவியரசன் என்பவர் கையெழுத்து போட்டவிவரமும் எனக்கு தெரியாது. வாசாஆ 4 கடனுக்காக எழுதப்பட்டது என்றால் சாட்சி ஹாஜமைதீன் கடனுக்காக எழுதப்பட்டது. நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். கடன் பத்திரம் என்று தெரிந்து தான் கையெழுத்து போட்டேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து 1ம் பிரதிவாதியை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக இந்த ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. சொத்தின் சதுரடி விலை எவ்வளவு மேற்கூரை மதிப்பு எவ்வளவு என்று சொல்லப்படவில்லை. சொத்தின் விவரம் சர்வே நம்பர், நான்கெல்லை, விஸ்தீரணம் போன்ற விவரங்களை யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. ஹாஜாமைதீன் கையில் பணம் யார் கொடுக்கவில்லை என்றால் பணத்தை நானும், ஹாஜமைதீன், அபுதாஹிர் ஆகியோர் சேர்ந்து கொண்டுபோய் கிளியனூர் ஜமாத் நிர்வாகிகளிடம் கொடுத்தோம். சமீம் பானு கையில் தொகை கொடுத்தது நேரடியாக தெரியாது. வாசாஆ 4 ஆவணம் மோசடியானது என்றாலும் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஹாஜாமைதீனுக்கு எந்த தொகையும் வந்து சேரவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை